**2020ம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருட்கள்**

**1. .**திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட தினசரி காய்கறி சந்தை காந்தி மார்க்கெட்டில் சுமார் 2 ½ ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இப் பகுதியில் மொத்த வியாபாரக் கடைகள் 175 ம் சில்லறை வியாபாரக் கடைகள் 200 ம் இயங்கி வருகிறது. தினசரி சுமார் 50000 பேர் வந்து செல்லும் பகுதியாகவும் உள்ளது. இங்கு மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதுடன், தினசரி நாளிதழ்களில் புகார் வந்தவண்ணம் உள்ளது என்பதால் இப்பகுதியில் பேவர் பிளாக் தளம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.24.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

**அலுவலக குறிப்பு**

வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்: 1915 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**2.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட தினசரி காய்கறி சந்தை காந்தி மார்க்கெட்டில் சுமார் 2 ½ ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இப் பகுதியில் மொத்த வியாபாரக் கடைகள் 175 ம் சில்லறை வியாபாரக் கடைகள் 200 ம் இயங்கி வருகிறது. பொது மக்களின் நலன் கருதி ஷை கடைகளை புதிதாக கீழ்க்காணுமாறு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | காந்தி தினசரி மார்க்கெட் – ஏ பிளாக் புனரமைக்கும் பணி | 24.50 |
| 2 | காந்தி தினசரி மார்க்கெட்டில் – ஏ 1 பிளாக் புனரமைக்கும் பணி | 24.50 |
| 3 | காந்தி தினசரி மார்க்கெட்டில் – பி பிளாக் புனரமைக்கும் பணி | 24.50 |

இக் கடைகள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u>

வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்: 1916 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**3.** கொரோனா வைரஸ் காரணமாக பொது மக்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதை தடுத்திடும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மாநகராட்சிக்குச் சொந்தமான நிரந்தர காந்தி மைதான தினசரி காய்கனி அங்காடிக்கு பொதுமக்கள், சில்லரை வியாபரிகள், வாகன ஓட்டுநர்கள், தொழிலாளர்கள் மற்றும் காய்கனி விற்பனையாளர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடுவதை தவிர்க்கும்பொருட்டு, சமூக இடைவெளி (social distance) பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு, இம்மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள் மற்றும் தெருக்களில் பொது மக்களுக்கு அறிவுரைகள் வழங்கி சமூக இடைவெளியுடன் (social distance) நடந்துகொள்ளவும், அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் கிருமி நாசினிகள் தெளித்திடவும், தற்காலிக காய்கனி அங்காடிகள் ஏற்படுத்தி பொது மக்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திடவும், கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை கண்டறிந்து தனிமைப்படுத்திடவும், அப்பகுதிகளை தடுப்புகள் அமைத்து பாதுகாத்திடும் பணிகள் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் ஈடுபட்டுள்ள பிரிவு புறப் பணியாளர்களின் வாயிலாக அரசு / மாவட்ட ஆட்சித் தலைவர் / மாநகராட்சி ஆணையர் அவர்களால் அவ்வப்போது பொது மக்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகள், அரசின் உத்திரவுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றினை அனைத்து பொது மக்களுக்கும் சென்றடையும் வண்ணம் சுமார் 30 மீட்டர் சுற்றளவிற்கு கேட்கக் கூடிய கை மைக்குகள் மற்றும் ஒலி பெருக்கிகள் இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வாகனங்களில் பொருத்தப்பட்டு, சிறு சாலைகள் மற்றும் தெருக்களில் நடமாடும் பொது மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், கொரொனா நோய்த் தொற்று காரணமாக ஊரடங்கு மேலும் 17.05.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இம்மாநகராட்சிக்குட்பட்ட மிக அகலமான சாலைகளின் இருபுறமும் உள்ள கடைக்காரரர்கள், சாலைகளில் நடமாடும் பொதுமக்களுக்கு கொரோனா நோய்த் தொற்று குறித்து வழங்கப்படும் அறிவுரைகள் சுமா

250 மீட்ட அளவிற்கு ஒரே நேரத்தில் கேட்கக்கூடிய அதிக ஒலித் திறனுடன் கூடிய 4 எண்ணங்கள் மைக்குகள், ஆம்பிளிபயகள் மற்றும் ஒலி பெருக்கிகள் கொள்முதல் செய்திட ஏதுவாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் ,கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் (இனம் ஒன்றிற்கு GST 18 % நீங்கலாக)) | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆம்பிளிபயர் | ஹார்ன் | மைக் | இணைப்பு உபகரணங்கள் |
| 1 | St. Roche Electronics,<br>12, Municipal Complex,<br>K.N.H. road, Dindigul-1 | **ரூ.8686/-** | **ரூ.3814/-** | **ரூ.5720/-** | **ரூ.2542/-** |
| 2 | S,M, Infotech,<br>6, Perumal TheppaKulam East, Town Hall Road,<br>Madurai. | **ரூ.8800/-** | **ரூ.3950/-** | **ரூ.5800/-** | **ரூ.2525/-** |
| 3 | Star Computers,<br>76/9 G.R. Complex,<br>Palani, | **ரூ.9000/-** | **ரூ.4000/-** | **ரூ.5900/-** | **ரூ.2600/-** |

மேற்கண்ட மூன்று நிறுவன விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள St. Roche Electronics, Dindigul நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.3063/2020/இ4).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி கொரோன தடுப்பு பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும், இப்பணிக்கான செலவு தொகை ரூ.1.00 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியினை தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிக்கு குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள St. Roche Electronics, Dindigul நிறுவன விலைப்
5. புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1917 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**4.** கொரோனா வைரஸ் (COVID-19) தொற்றிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், நோய்க் கிருமிகளை மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுத்திடவும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நாடு முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தற்காலிக காய்கறி அங்காடிகள் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் நாளது தேதி வரையில் தொடர்ந்து செயல்பட்டு வரப்பெறுகிறது. மேற்படி கடைகளுக்கு தேவையான போக்கஸ் விளக்குகள் மற்றும் இணைப்பு உபகரணங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு பதிலாக புதிதாக 12 எண்ணங்கள் 150W LED போக்கஸ் விளக்குகள் மற்றும் இணைப்பு உபகரணங்களை கொள்முதல் செய்து பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் **ரூ. 1,25,000/-ற்கு (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)** மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **நிறுவனம்** | **தேவையான உபகரணங்கள்** | **விலை விகிதம் (ஒன்றுக்கு)** |
|---|---|---|---|
| 1 | St. Roche Electronics, 12, Municipal Complex, K.N.H. road, Dindigul-1 | 150w LED Flood Light GST 12% | **ரூ.9980/-** (GST உட்பட) |
| | | 1100V Cable 90 meters 2.5 Squre meter 18% | **ரூ.2000/-** (GST உட்பட) |
| 2 | Star Computers, 76/9 G.R. Complex, Palani. | 150w LED Flood Light GST 12% | **ரூ.10528/-** (GST உட்பட) |
| | | 1100V Cable 90 meters 2.5 Squre meter 18% | **ரூ.2302/-** (GST உட்பட) |
| 3 | Sri Amman Electricals, 81/1, Pensioner Street, Palani Road, Dindigul -1 | 150w LED Flood Light GST 12% | **ரூ.10226/-** (GST உட்பட) |
| | | 1100V Cable 90 meters 2.5 Squre meter 18% | **ரூ.2124/-** (GST உட்பட) |

மேற்கண்ட மூன்று நிறுவன விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள St. Roche Electronics, Dindigul நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.3063/2020/இ4).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி கொரோன தடுப்பு பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும், இப்பணிக்கான செலவு தொகை **ரூ. 1,25,000/-**

**லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்**) COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3. இப்பணியினை தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிக்கு குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள St. Roche Electronics, Dindigul நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1918 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**5.** இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு இந்திய அரசால் மூன்றாம் கட்டமாக 04.05.2020 முதல் 17.05.2020 வரை ஊரடங்கு தடை உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தும் பொருட்டு அவர்கள் வசிக்கும் பகுதி மற்றும் அப்பகுதியினை சுற்றியுள்ள இடங்களுக்குச் செல்லும் சாலையினை மரம் மற்றும் தகரத்திலான தடுப்புகள் கொண்டு தடை ஏற்படுத்தும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.3,60,000/- க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. இப் பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்து ஏற்கனவே பணியினை செய்து வரும் வி.காயத்ரி, ஆர்.கே. டெக்கரேட்டர், திண்டுக்கல் வசம் அதே விலைப்புள்ளி விகிதத்தில் பணியினை ஒப்படைத்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.3063 / 2020 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.3,60,000/- னை COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4) இப் பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள வி.காயத்ரி, ஆர்.கே. டெக்கரேட்டர், திண்டுக்கல் வசம் பணியினை ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1919 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**6.** இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு இந்திய அரசால் மூன்றாம் கட்டமாக 04.05.2020 முதல் 17.05.2020 வரை ஊரடங்கு தடை உத்திரவு நீட்டிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக காய்கறி மார்க்கெட் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் காய்கறி கொண்டு வரும் இலகு ரக வாகனம் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதியாக மேடு பள்ளங்களை வாடகை அடிப்படையில் Earth Work Excavator and Front end loader மற்றும் டிராக்டர்களை உபயோகித்து சரி செய்து சாமியானா நிழல் பந்தல் அமைத்து கடைகளுக்கு இடையேயும், முன்புறமும் தடுப்பு அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/- ஆகும். இப் பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்து ஏற்கனவே பணியினை செய்து வரும் வேல்முருகன், பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் வசம் அதே விலைப்புள்ளி விகிதத்தில் பணியினை ஒப்படைத்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.3063 / 2020 / இ 4)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.5,00,000/- னை COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4) இப் பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்து ஏற்கனவே பணியினை செய்து வரும் வேல்முருகன், பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் வசம் பணியினை ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1920 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**7. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் திடக் கழிவுகளை மறு சுழற்சி செய்தல் தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் குறித்த பணியில் அயல் ஒப்பந்த அடிப்படையில் 24 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் உட்பட மொத்தம் 29 நபர்கள் ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி, திண்டுக்கல் என்ற நிறுவனத்தாரால் மேற்கண்ட பணியாளர்கள் விநியோகம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட ஒப்பந்த காலம்**

31.03.2020 உடன் முடிவடைகிறது. இந்நலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.26458/2016/பி1 நாள் 30.03.2020ல் மேற்கண்ட ஒப்பந்த காலத்தினை மேலும் மூன்று மாத காலத்திற்கு 30.06.2020 வரை நீட்டிப்பு வரையிலான காலத்திற்கு ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.26458/2016/பி1 நாள் 30.03.2020ஐ பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மாமன்றம் மேற்கண்ட பணியினை ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனமே 30.06.2020 வரை தொடர்ந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1921 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**8.** திண்டுக்கல் மாநகராட்சியில் சேகரிக்கப்படும் தினசரி குப்பைகளை மாநகராட்சிக்குச் சொந்தமான முருகபவனம் குப்பைக் கிடங்கில் கொட்டி வரப்பட்டது. தற்சமயம் குப்பைகளை Bio Mining முறையில் அகற்றிடவும், தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை Micro Compost மூலம் நுண்ணுயிர் உரமாக மாற்றிடவும் MCC Plant அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த Dumper Placer வாகனங்கள் தற்சமயம் செயல்படாமல் உள்ளது என்பதால் கீழ்க்கண்ட இரண்டு டம்பர் பிளேசர் வாகனங்களை குடிநீர் வாகனங்களாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.19.00 (தலா ரூ.9.50 இலட்சம்) இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) வருவாய் நிதி 2019-20 ன் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்: 1922 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**9.** கொரோனா வைரஸ் (COVID-19) தொற்றிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், நோய்க் கிருமிகளை மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுத்திடவும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நாடு முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் மற்றும் சாலையோர வீடற்ற வறியவர்களுக்கு தினசரி 3 வேளை அம்மா உணவகங்கள் மூலம் உணவு வழங்கிட தமிழக அரசு உத்திரவிடப்பட்டுள்ளதைத் தொடந்து, மேற்படி அம்மா உணவகங்களில் தினசரி 3 வேளைக்கான உணவுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 09.04.2020 அன்று திடீரென ஏற்பட்ட புயல் மற்றும் சூறாவளி காற்றின் காரணமாக இம்மாநகர் பகுதிகளில் மின் தடை ஏற்பட்டு, அம்மா உணவகங்களில் உணவு தயாரித்து, பொது மக்களுக்கு உணவு வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டதால், மேற்படி உணவகங்களில் உணவு பெற வரிசையில் காத்திருந்த பொது மக்கள் கூச்சலிட்டதின் காரணமாக சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டது.

எனவே, ஆணையர் அவகளின் அறிவுரையின்படி, பொது மக்கள் நலன் கருதி, மேற்படி அம்மா உணவகங்களில் குறித்த நேரங்களில் உணவுகள் தயாரிக்கப்பட்டு வழங்கிட ஏதுவாக மின்சார தடை ஏற்படா வண்ணம் UPS கருவிகள் பொருத்திட வேண்டியுள்ளதாலும், தற்பொழுது ஊரடங்கு உத்திரவு பல நாட்கள் நீடிக்க வாய்ப்புகள் உள்ளது என்பதாலும், மேற்கண்ட UPS கருவிகள் கொள்முதல் செய்திட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Premiere Power Controls,<br>12-B VIP Complex,<br>Trichy Road, Dindigul-1 | **ரூ.66,160/-**<br>(GST உட்பட) |
| 2 | Premiere Power Products,<br>73, 1st Floor,<br>A.K.M.G. Mahal Complex,<br>Thadicombu Road, Dindigul-1 | **ரூ.67,500/-**<br>(GST தனி) |
| 3 | Nithya Battery Traders,<br>25, G.C.N. Complex, Pandian Nagar,<br>Trichy Road, Dindigul-1 | **ரூ.68,400/-**<br>(GST உட்பட) |

மேற்கண்ட மூன்று நிறுவன விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் குறைந்த பட்ச விலை விகிதமான **ரூ.66,160/-ற்கு விலைப்புள்ளி அளித்துள்ள Premiere Power Controls, Dindigul** நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.3063/2020/இ4).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி கொரோன தடுப்பு பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும், இப்பணிக்கான செலவு தொகை ரூ.66,160/-ஐ COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியினை தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிக்கு குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள Premiere Power Controls, Dindigul நிறுவனத்திடமிருந்து பொருட்களை கொள் முதல் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்: 1923 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**10.** கொரோனா வைரஸ் காரணமாக பொது மக்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதை தடுத்திடும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மாநகராட்சிக்குச் சொந்தமான நிரந்தர காந்தி மைதான தினசரி காய்கனி அங்காடிக்கு பொதுமக்கள், சில்லரை வியாபரிகள், வாகன ஓட்டுநர்கள், தொழிலாளர்கள் மற்றும் காய்கனி விற்பனையாளர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடுவதால், சமூக இடைவெளி (social distance) பாதிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்தாலோசனை செய்யப்பட்டு, இம்மாநகருக்குட்பட்ட சாலைகள் மற்றும் தெருக்களில் பொது மக்கள் அறியும் வண்ணம் அறிவுரைகள் வழங்கி சமூக இடைவெளியுடன் (social distance) நடந்துகொள்ளவும், அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் கிருமி நாசினிகள்

தெளித்திடவும், தற்காலிக காய்கனி அங்காடிகள் ஏற்படுத்தி பொது மக்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திடவும், கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை கண்டறிந்து தனிமைப்படுத்திடவும், அப்பகுதிகளை தடுப்புகள் அமைத்து பாதுகாத்திடும் பணிகள் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் ஈடுபட்டுள்ள பிரிவு தலைமை அலுவலர்கள் மற்றும் புறப் பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகள் உடனுக்குடன் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஒரே நேரத்தில் சென்றடையும் வண்ணம் ஏற்கனவே இம்மாநகராட்சி நிதியிலிருந்து பெற்று வழங்கப்பட்ட வாக்கி டாக்கிகளில் 1. பேட்டரிகளின் வாழ்நாள் காலம் (life time) நிறைவுற்றதன் காரணமாக மின் திறன்

(battery charge) முழுமையாக நிற்காமல் அதன் திறனை இழப்பதாலும், 2. ஆண்டெனா இரண்டாக பிளவு பட்டதாலும், 3. ஒலி அளவு கூட்டல் குறைத்தலுக்கு பயன்படும் நாப்கள் பழுதுபட்டதாலும் வாக்கிடாக்கிகள் தொடர்ந்து இயங்கிட இயலவில்லை.

எனவே, மேற்கண்ட பழுதுகளை சரி செய்திட ஏதுவாக கீழ்க்கண்ட விவரப்படி மாற்று உபகரணங்கள் (spare parts) கொள்முதல் செய்திட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Miles Technologies,<br>959, Chikkananjundappa Road, Ramasamy Palaya,<br>M.S. Nagar Post, Bangalore-33. | **ரூ.2,20,365/-**<br>(GST உட்பட) |
| 2 | Talakaround,<br>83, 1st Floor, 2nd cross, Keerthi Layout, Kammanahalli Main Road, St. Thomas Town Post, Bangalore-84. | **ரூ.1,99,442/-**<br>(GST உட்பட) |
| 3 | Sai Communications,<br>41/6, Chikkasandra Main Road,<br>opp. Anjaneya Temply,<br>Chikkasandra Colony,<br>T. Dasarahalli Post, Bangalore-57 | **ரூ.2,20,194/-**<br>(GST உட்பட) |

மேற்கண்ட மூன்று நிறுவன விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலை விகிதமான ரூ.1,99,442/-ற்கு விலைப்புள்ளி அளித்துள்ள Talakaround, Bangalore நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.3063/2020/இ4).**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி கொரோன தடுப்பு பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும், இப்பணிக்கான செலவு தொகை ரூ.1,99,442/-ஐ COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியினை தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிக்கு குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ள Talakaround, Bangalore நிறுவன விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1924 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**11.** கொரோனா வைரஸ் காரணமாக பொதுமக்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதை தடுத்திடும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மாநகராட்சிக்குச் சொந்தமான நிரந்தர காந்தி மைதான தினசரி காய்கறி அங்காடிக்கு பொதுமக்கள், சில்லறை வியாபாரிகள், வாகன ஓட்டுநர்கள், தொழிலாளர்கள் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடுவதால், சமூக இடைவெளி (social distance) பாதிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்தாலோசனை செய்யப்பட்டு, காந்தி மைதான காய்கறிஅங்காடியினை தற்காலிகமாக அடைப்பு செய்தும், அதற்குப் பதிலாக மாநகரின் அனைத்து எல்லைகளில் இம்மாநகராட்சிக்குச் சொந்தமான மற்றும் அரசு அல்லது தனியாருக்குச் சொந்தமான பள்ளி கல்லூரி வளாகங்களில் தற்காலிக காய்கறி சந்தைகள் அமைத்திடவும், மேற்கண்ட சந்தைகள் நல்லமுறையில் இயங்கிடத் தேவையான அடிப்படை வசதிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டும், அதன் காரணமாக பொதுமக்களை ஒரே இடத்தில் கூடுவதற்கு பதிலாக பரவலாக அனைத்து தற்காலிக காய்கறி அங்காடிகளிலும் சமூக விலகலுடன் பொதுமக்கள் அதிகாலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை தங்களுக்குத் தேவையான காய்கறிகளை கொள்முதல்

செய்து கொள்ள தேவையானஅனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வாட்ஸ் ஆப் செய்தியில், தற்காலிக சந்தைகள் அமைத்திட தேவையான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி 26.3.2020 அன்று ஆணையர் மற்றும் அனைத்து பிரிவு தலைமை அலுவலர்களால் தற்காலிக காய்கறி சந்தைகள் அமைத்திட கீழ்க்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பழனி ரோடு, லாரிபேட்டை | இம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் |
| 2 | எஸ்.எம்.பி.எம். பள்ளி அருகில் | மாநில சாலை |
| 3 | மேட்டுப்பட்டி பாஸ்கா மைதானம் | மேட்டுப்பட்டி பங்கிற்குச் சொந்தமானது |
| 4 | நாகல் நகர் வாரச் சந்தை ( வாரச் சந்தை என்பதால் அனைத்து நாட்களிலும் இயங்காத காலியிடம்) | இம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் |
| 5 | காமராஜர் பேருந்து நிலையம் | இம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் |
| 6 | அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி | தனியாருக்குச் சொந்தமான பள்ளி |
| 7 | எம்விஎம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | அரசுக்குச் சொந்தமான இடம் |
| 8 | ஆர்.எம்.காலனி கலையரங்கம் அருகில் | மாநகராட்சி சாலை |
| 9 | நத்தம் ரோடு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையைம் ( ITI) | அரசுக்குச் சொந்தமான இடம் |

மேற்கண்ட 8 இடங்களிலும் இம்மாநகராட்சிக்குச் சொந்தமான தெரு விளக்குகள் ஏதும் அமைக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட 8 இடங்களிலும் தற்காலிகமாக தகரக் கூரை, சாமியானா பந்தல் அமைக்கும் பணிக்கு உறுதுணையாகவும், காய்கறி விற்பனையாளர்கள் அதிகாலை 4.00 மணி முதல் சரக்குகளை இறக்க வேண்டியுள்ளதாலும் விற்பனையாளர்கள் மற்றும் சரக்குகளுக்கு பாதுகாப்பிற்காகவும் பின்வரும் விவரப்படி தெருவிளக்குகள் பொருத்த வேண்டியுள்ளது.

| வ. எண் | இட விபரம் | தேவைப்படும் பொருள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | TL LED 20 Wts | 36 Wts Choke | 36 Wts Starter | 20 wts LED Bulb | 30 wts LED Bulb | 2.5 sq mm Copper |
| 1 | பழனி ரோடு, லாரிபேட்டை | 65 | 30 | 30 | 27 | 16 | 1 |
| 2 | எஸ்.எம்.பி.எம். பள்ளி அருகில் | 63 | 33 | 33 | 35 | 18 | 1 |
| 3 | மேட்டுப்பட்டி பாஸ்கா மைதானம் | 70 | 36 | 36 | 36 | 19 | 1 |
| 4 | நாகல் நகர் வாரச் சந்தை ( வாரச் சந்தை என்பதால் அனைத்து நாட்களிலும் இயங்காத காலியிடம்) | 75 | 35 | 35 | 33 | 15 | 1 |
| 5 | காமராஜர் பேருந்து நிலையம் | 85 | 35 | 35 | 37 | 17 | 1 |
| 6 | அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி | 67 | 35 | 35 | 38 | 16 | 1 |
| 7 | எம்விஎம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 70 | 36 | 36 | 37 | 18 | 2 |
| 8 | ஆர்.எம்.காலனி கலையரங்கம் அருகில் | 40 | 20 | 20 | 25 | 15 | 1 |
| 9 | நத்தம் ரோடு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையைம் ( ITI) | 65 | 40 | 40 | 32 | 16 | 1 |
| | **மொத்தம்** | **600** | **300** | **300** | **300** | **150** | **10** |

மேற்கண்ட மின் ஒளி விளக்கு பொருட்களை போர்க்கால அடிப்படையில் பொது மக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி உடனடியாக பொருத்திட வேண்டியுள்ளதாலும், தற்பொழுது ஊரடங்கு உத்திரவு காரணமாக மேற்கண்ட பொருட்களை தற்காலிகமாக வாடகைக்கு பெற்று பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வாடகைக்கான செலவினம் அதிகமாக ஏற்படுவதாலும், ஊரடங்கு உத்திரவு மேலும் நீடிக்க வாய்ப்புகள் உள்ளது என்பதாலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் / விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்திட வழிவகை இல்லை என்பதாலும் மேற்கண்ட பொருட்களை திண்டுக்கல் மாநகரில் இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே பொருட்களை விநியோகம் செய்த முன் அனுபவமுள்ள மற்றும் மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள வரதராஜ்

காம்ப்ளக்ஸில் அமையப் பெற்ற பத்மா லைட்ஸ் நிறுவனத்தில் மேற்படி பொருட்களை கொள்முதல் செய்திடவும் , அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் (GST வரி உட்பட) க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.3063 / 2020 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.4,00,000/- னை COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4) இப் பணிக்காக பத்மா லைட்ஸ் நிறுவனத்தில் பொருட்களை கொள்முதல் செய்து கொள்ள சப்ளை உத்திரவு வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 1925 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---